1979 நவம்பர் 2]

திரு. துரை முருகன் : நான் கேள்வி கேட்பதற்காக அங்கேயிருந்து ஓடி வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏன் ஓடி வருகிறீர்கள், நிதானமாக வருவதுதானே. இது அணைக்கட்டு தொகுதி பற்றியது; அணைக்கட்டு வேலூர் அருகில் இருக்கிறது, எனவே உறுப்பினர் துரை முருகன் அவர்கள் உட்கார வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் குடியாத்தம் தொகுதி. எனவே, நீங்கள் உட்காருங்கள்.

வேப்பூர் ஒன்றியத்தில் புதிய ஏரி அமைப்பு.

* **வினா எண் 74—திரு. என். பெருமாள் :** மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், வரகூர் தொகுதியைச் சேர்ந்த வேப்பூர் ஊராட்சி ஒன்றியம் ஆயக்குடிக்கும் ஆசூருக்கும் இடையில் கட்டவிருக்கும் ஏரியின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு

(ஆ) எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?

(இ) இதனால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) உத்தேசத் திட்டத்தின் தற்போதைய மதிப்பீட்டுத் தொகை சுமார் ரூ. 6.15 லட்சம்.

(ஆ) திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

(இ) சுமார் 235.25 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி மூலம் நன்செய் நிலங்களாக மாற்றப்படும்.

நீலகிரியில் கற்பூர தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை.

* **வினா எண் 75—திரு. போ. கோபாலன் :** மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரியில் கற்பூர தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்துவது குறித்த செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?